Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

21.05.2020 | வியாழக்கிழமை | தொடர்புக்கு 076 584 2222

# யாழ்ப்பாணத்தில் கடும் காற்று!!



**73பேர் பாதிப்பு ஒருவர் காயம்**

**வாழைகள் குலையோடு சரிந்தன பயன்தரு மரங்களும் முறிந்தன**

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து அதிகரித்த வேகத்தில் காற்று வீசி வருகின்றது. இன்று இதன் தாக்கம் அதிகளவாக இருந்தது. பலமான காற்றால் 10 குடும்பங்களைச் சேர்ந்த 73பேர் பாதிப்படைந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பல வாழைமரத் தோட்டங்களில் இருந்த வாழைகள் குலையோடு முறிந்து வீழ்ந்துள்ளன.

பக்.2

# பரீட்சைகள் திட்டமிட்டவாறு உரிய காலத்தில் நடக்கும்

## கல்வி அமைச்சு உறுதி

கொழும்பு, மே 21

இந்த ஆண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சை ஆகியவற்றை பிற்போடுவதற்கு தீர்மானிக்கவில்லை என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எந்தவொரு பரீட்சார்த்திக்கும்

பக்.2

# முல்லைத்தீவில் கடற்படையினர் இருவருக்கு கொரோனா தொற்று

## வெலிசறை முகாமைச் சேர்ந்தவர்கள்

முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு, விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தலில் இருந்த வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று இருப்பதாக இனங்காணப்பட்ட இரு கடற்படையினரும் வெலிகந்த மருத்துவமனைக்கு இன்று காலை

பக்.2

# போதனாவில் டெங்கு: வெறும் ஊகமே!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தினுள் 7 இடங்களில் டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழல் காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டுசெல்லப் பட்டது. அவ்வாறான தகவல்

பக்.2

# பாடசாலை ஆரம்பம் ஜனாதிபதி கைகளில்!

## அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் மூடப்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் மீண்டும் திறப்பது தொடர்பாக இறுதி முடிவு எட்டப்படவில்லை. சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதியால் இறுதி முடிவு

பக்.2

# புதினம் தெரியுமோ?

**முல்லைத்தீவு கேப்பாபிலவில தனிமைப்படுத்தியிருந்த 2 நேவிக்காரருக்கு கொரோனா இருக்கெண்டு உறுதிப்படுத்தி இருக்கு. இந்தத் தகவல் வடக்கு மாகாண ஆளுநருக்கு தெரிஞ்சு, ஆள் கொதிச்சுக் கொந்தளிச்சிட்டா. இண்டைக்கு நடந்த கூட்டமொண்டிலையும் அவா இதைப் பற்றி ஒரு பிடிபிடிச்சிருக்கிறா. “ எதுக்கு வடக்குக்கு இப்பிடி**

பக்.2

# பணம் வாங்கச் சென்று பிணமான 3 பெண்கள்

## மாளிகாவத்தையில் பரிதாபம்

## 8 பேர் வைத்தியசாலையில்; 6 பேர் கைது

கொழும்பு, மே 21

கொழும்பு, மாளிகாவத்தையில் வீடொன்றில் நிதி விநியோகச் செயற்பாடு ஒன்றின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளனர். இன்று பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 8 பேர் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நோன்புக் காலத்தையொட்டி முஸ்லிம் செல்வந்தர் ஒருவர் பொலிஸ் அனுமதியைப் பெற்று மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதியிலுள்ள

பக்.2

# மருத்துவர்களுக்கு ஓய்வு இனி 61 வயதிலேயே !

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, மே 21

மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதை 61 ஆண்டுகளாக அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவு

பக்.2

# பொறுப்புக்கூறல் முக்கியமானது

## அமெரிக்கா அழுத்தமாக வலியுறுத்து

கொழும்பு, மே 21

இலங்கையில் பொறுப்புக்கூறல் முக்கியமானது என்றும், நீண்டகால உறுதித்தன்மை மற்றும் செழிப்புக்கு இது முக்கியமானது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை பிரதி உதவிச் செயலாளர் அலிஸ்

பக்.2

## விடுமுறை நாளில் வேட்புமனுத் தாக்கல்

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை

கொழும்பு, மே 21

அரசு அறிவித்த விடுமுறை நாள்களில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குள் ஒருமித்த நிலைப்பாடு காணப்படவில்லை. இந்த விடயம் உயர் நீதிமன்றத்திலும் எதிரொலித்துள்ளது. அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையின் போதே இந்த விடயம் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ண ஜீவன் ஹூலின் சட்டத்தரணி ஹஸ்திக தேவேந்ர தெரிவித்ததாவது, நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டத்துக்கு அமைவாக வேட்பு மனுக்

பக்.2

## பரீட்சைகள்

அநீதி இழைக்கப்படாத வகையில் பரீட்சைகள் நடத்தப்படுமென அமைச்சின் செயலர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார். கண்டி குருதெனிய கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார். கால அட்டவணைகளுக்கு அமைய பாடத்திட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்ட பகுதிகளுக்கு அமைய பரீட்சைகள் நடத்தப்படும். அத்துடன் சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கு அமையவே பாடசாலைகளும் மீளத் திறக்கப்படவுள்ளதாக என்.எச்.எம். சித்ரானந்த கூறினார். (ஓ,5)

# யாழ்ப்பாணத்தில்

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவிக்கையில், தற்போது நிலவிவருகின்ற அம்பான் புயலின் தாக்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலும் காற்றின் தாக்கமானது கடந்த 24 மணி நேரத்துக்குள் உயர்வானதாகக் காணப்பட்டது.
நீர்வேலி, கோப்பாய், அச்சுவேலி, திருநெல்வேலிப் பகுதிகளில் வாழை மரங்கள் குலையோடு சரிந்து வீழ்ந்துள்ளன. பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 வீடுகள் சேதமடைந்துள்ளன. கைதடிப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளது. மயிலிட்டிப் பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்து பெண் ஒருவர் காயமடைந்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல்போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. சில மணி நேரங்களின் பின்னர் அவர் கரை சேர்ந்துள்ளார்.
இந்தக் காலநிலையானது எதிர்வரும் 24 மணித்தியாலத்துக்கும் எதிர்பார்ப்பதால் மக்கள் அவதானமாக செயற்படவேண்டும். கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகமாகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5,7,105,111)

## போதனாவில் டெங்கு:

வெறும் ஊகத்தின் அடிப்படையிலானது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
வடக்கு மாகாண சுகாதார நிலைமை தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவமனை பொறுப்பு மருத்துவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இன்று இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் டெங்குக்கு ஏதுவான சூழல் இருப்பதாக இதன் போது மருத்துவர் கேசவன் சுட்டிக்காட்டியுள்ளார். மருத்துவமனையில் டெங்கு பெருக்கத்துக்குரிய இடங்கள் காணப்படுகின்றது. சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டவர்களில் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளான சம்பவங்களும் உண்டு. மாவட்ட பூச்சியியல் ஆய்வு பிரிவினர் மருத்துவமனையில் மேற்கொண்ட ஆய்வுக்கு அமைவாக இந்த விடயம் உறுதி செய்யப்பட்டதாக ஆளுநரின் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தவறும் பட்டசத்தில் பணிப்பாளருக்கு எதிராக, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுநர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ஓ,5,105)

## பாடசாலை ஆரம்பம்

எட்டப்படும். இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம் சித்ரானந்தா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஜனாதிபதியின் அறிவித்தலின்படி நாடாளவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதைப் போன்று, பாடசாலைகளைத் திறப்பது தொடர்பான முடிவுகளை எட்டுவதற்கு முன்னர் அனைத்துப் பரிந்துரைகளும் பரிசீலிக்கப்படும் என்றார். (சு)

## முல்லைத்தீவில்....

அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப்பாப்பிலவு விமானப்படைத் தளத்துக்கு 4 நாள்களுக்கு முன்னர் 400 கடற்படையினர் கொண்டு வரப்பட்டனர்.
அவர்களில் காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகளுடன் இருந்த 99 பேரின் மாதிரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை பெறப்பட்டுக் கொள்ளப்பட்டன. அநுராதபுரம் மருத்துவமனைக்கு சோதனைக்காக அனுப்பப்பட்டது. பரிசோதனை முடிவுகள் இன்று காலை கிடைக்கப் பெற்றன.
கடற்படையினர் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் உடனடியாக வெலிகந்த மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், என்றார். (ஓ,5,19,246)

## மருத்துவர்களுக்கு ஓய்வு...

களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அத்தோடு ஏனைய துறைகளின் ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது தொடர்பாக பரிதுரைகளை வழங்க சிறப்புக் குழு ஒன்றை அமைக்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (ஓ,5)

## தேர்தல்கள்

களை, சாதாரண வேலை நாள்களிலேயே ஏற்க முடியும். அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்ட மார்ச் 17,18,19 ஆம் திகதிகளில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை சட்டத்துக்கு முரணானதாகும். மார்ச் 16 ஆம் திகதியும் விடுமுறைகள் சட்டத்துக்கு அமைய பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டபோது, அந்த தினத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்படியானால் அதே விடுமுறைகள் சட்டத்தின் கீழ், அல்லது அந்த சட்டத்தை பயன்படுத்தி விடுமுறை தினமாக அரிவிக்கப்பட்ட 17,18,19 ஆம் திகதிகளில் வேட்புமனுவை ஏற்றுக்கொண்டமை சட்டத்துக்கு முரணானது, என்று தெரிவித்தார்.
இதன்போது சட்டத்தரணி ஹஸ்திக தேவேந்ரவை நோக்கி, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீங்கள் இங்கு முன் வைப்பது ஆணைக்குழு உறுப்பினரின் நிலைப்பாடா அல்லது தேர்தல்கள் ஆணைக் குழுவின் நிலைப்பாடா என்று வினவினார்.
சட்டத்தரணி ஹஸ்திக, இது ஆணைக்குழுவின் நிலைப்பாடு இல்லை எனவும் ஆணைக்குழுவின் உறுப்பினரான தனது சேவை பெறுநர் ஹூலின் சார்பிலான வாதம் எனவும் தெரிவித்தார். இதற்கு சட்ட மா அதிபர் சார்பில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் இந்திகா தேமுனி டி சில்வா, தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த முடிவொன்றை அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த சட்டத்தரணி ஹஸ்திக தேவேந்ர, உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில் தமது சேவை பெறுநர் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள நிலையில், அதனால் அவரது நிலைப்பாட்டை மன்றுக்கு அறிவிக்க அவருக்கு உரிமை உள்ளது என்று தெரிவித்தார். (ஓ,5)

## புதினம்...

**நேவிக்காரரை அள்ளிக் கட்டிக் கொண்டு வருகினம்?" எண்டு கொஞ்சம் கோபத்தோட கேட்டிருக்கிறா. அவான்ர கோபத்திலையும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யுது. வெலிசறைக்கு கிட்ட நிறைய இடங்கள் தனிமைப்படுத்தலுக்கு இருக்க என்னத்துக்காக வடக்குக்கு கொண்டு வரவேணும். அப்பிடித் தனிமைப்படுத்தலுக்கு எண்டு கொண்டு வாற ஆக்களையும் சரியாத் தனிமைப்படுத்தலில இருக்கினமா எண்டு ஒருத்தரும் கண்காணிக்கிறேலை எண்ட குற்றச்சாட்டும் இருக்கு. கிட்டடியில கேப்பாபிலவுப் பக்கம் உள்ள ஒரு கட்டடத்தில புதிசா ஆக்கள் தங்கி இருந்திருக்கினம். வழக்கமா ரூர் வாறவை ஒரு பொதுக்கட்டடத்தில தங்கி இருந்தா எப்பிடி இருப்பினமோ அப்பிடித்தான் அங்க எல்லாரும் இருந்திருக்கினம். தங்கட பாட்டில வெளியில கடையளுக்கும் போய் வந்தவையாம். அதுக்குக் கிட்ட நிறையக் குடிமனையளும் இருக்கு. அந்தச் சனம் ஒண்டுக்கும் , அந்தப் பொதுக்கட்டடத்தில் கொண்டு வந்து விடப்பட்ட ஆக்கள் தனிமைப் படுத்தலுக்கு வந்தவை எண்டும் சொல்லுப்படலே. கேப்பாபிலவில அப்பிடி தனிமைப்படுத்தி இருந்த 2 பேருக்குத்தான் இப்ப கொரோனா எண்டு கண்டுபிடிச்சிருக்கு. முள்ளிவாய்க்காலுக்கு விளக்கேத்தினாலே வீடுகளுக்க தனிமைப்படுத்த ஓடித்திரிஞ்ச பொலிஸ், அங்க தனிமைப்படுத்தலுக்கு எண்டு கொண்டு வந்த ஆக்களை, ஊரெல்லாம் உலவ விட்டிட்டு வேடிக்கை பார்க்குது எண்டா, எல்லாருக்கும் சந்தேகம் வரத்தானே செய்யும். அந்தச் சந்தேகம் ஆருக்கும் வரலாமெண்டா, ஆளுநருக்கு வந்ததிலையும் பிழையில்லைத்தானே.**

## பொறுப்புக்கூறல்...

வெல்ஸ், நேற்று இணையவழி ஊடக சந்திப்பை நடத்தியிருந்தார். ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,
உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், அமெரிக்கா இலங்கை இடையிலான உறவுகளின் வலிமை வெளிப்பட்டது. உடனடி மனிதாபிமான, நீண்டகால மீள் கட்டமைப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஆதரவையும் வழங்கியது. இலங்கை அரசு, நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னெடுக்க வேண்டும். இது நீண்டகால உறுதித்தன்மையையும் செழிப்பையும் வளர்க்கும். இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை பெறுமதியான பங்காளர் என்றும், இலங்கையுடனான உறவுகள் அமெரிக்காவுக்கு முக்கியமானது என்றும் அலிஸ் வெல்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ,5)

## பணம் வாங்கச் சென்று

வீடொன்றில் நிதி விநியோகச் செயற்பாட்டில் ஈடுபட்டார் எனவும், இதன்போது திடீரென மக்கள் முண்டியடித்ததால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 3 பெண்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். இந்த நிதி விநியோகச் செயற்பாட்டின்போது சமூக இடைவெளி பேணப்படாமையால் இந்த நெரிசல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். சம்பவத்தையடுத்து ஜும்மா மஸ்ஜித் வீதியூடாக கொழும்புக்குள் நுழைதல் மற்றும் அங்கிருந்து வெளியேறுதல் ஆகியன தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாளிகாவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

# வீடு புகுந்து பொருள்கள் அடித்து உடைத்து நாசம்

## வரணியில் சம்பவம்

கொடிகாமம், மே 21
தென்மராட்சி வரணிப் பகுதியில் வீடு புகுந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருள்களை அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். இந்த சம்பவம் நேற்றுப் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் வரணி குடமியன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வீட்டின் உரிமையாளர் தோட்டத்துக்குச் சென்று வீடு திரும்புவதற்கு முன்னர் இனந்தெரியாத நபர்கள் வீட்டுக்குள் உள்நுழைந்து தொலைக்காட்சிப் பெட்டி, கண்ணாடிப் பொருள்கள், வீட்டு ஜன்னல்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அடித்து நொருக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-159)



# சங்கிலித் திருடர்கள் இருவர் சிக்கினர்

**9 சங்கிலிகளும், ஹெரோயினும் மீட்பு**

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணத்தில் வீதியில் செல்லும் பெண்களிடம் சங்கிலி அறுப்புக்களில் தொடர்ச்சியாக ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இன்று கைதுசெய்யப் பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும், 9 தங்கச்சங்கிலிகளும், இரண்டு கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட 9 தங்கச்சங்கிலிகளில் ஆறு தங்கச் சங்கிலிகள் களவாடப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் மூன்று சங்கிலிகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை. சங்கிலியைப் பறிகொடுத்தவர்கள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற தடுப்புப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களாக வீதியில் பயணிக்கும் பெண்களிடம் தங்கச் சங்கிலிகள் அபகரிக்கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.
யாழ்ப்பாணம் புத்தூர் சோமாஸ்கந்த வித்தியாலய ஒழுங்கைக்கருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் இலக்கத்தகடுகளை வயர்களால் கட்டிய நிலையில் பயணித்த மோட்டார் சைக்கிளைப் பொலிஸார் மறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர்களிடம் இருந்து தங்கச்சங்கிலி ஒன்றும், இரண்டு கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டன. சந்தேக நபர்களைக் கைது செய்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர்கள் இருவரும் இருபாலை மடத்தடிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.
இவர்கள் வீதியில் செல்லும் பெண்களின் சங்கிலிகளை அறுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கோப்பாய், கொடிகாமம், சாவகச்சேரி, சுன்னாகம், அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். பெண்களிடம் அறுக்கப்பட்ட சங்கிலிகளை திருநெல்வேலியிலுள்ள நகைக்கடை ஒன்றில் அடைவு வைத்துள்ளனர். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவற்றையும் மீட்டுள்ளனர்.
மீட்கப்பட்ட 9 தங்கச் சங்கிலிகள், திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.
யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(க11,159,7,26)

# 30 ஆழ்கடல் படகுகள் மீனவர்களுடன் மாயம்

கொழும்பு,மே 21
சீரற்ற காலநிலை காரணமாக இலங்கைக்குச் சொந்தமான 30 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் மீனவர்களுடன் இந்தோனேசியக் கடற்பரப்புக்குள் அடித்துச் செல்லப் பட்டுள்ளன என்று மீன்பிடி, நீரியியல் வளத்திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும், மீனவர்களைத் தேடிக் கடற்படைப் படகுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் படுகின்றது.
மீன்பிடிப் படகுகளில் 180 மீனவர்கள் உள்ளனர். அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

# நீதிமன்றமே தேர்தலை தீர்மானிக்கவேண்டும்

## மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, மே 21
தேர்தலை நடத்துவது பற்றி நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க தேர்தலை நடத்துவது அவசியம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்தார்.
அமரபுர நிக்காய பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் அக்கமஹா பண்டித்த சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரரின் சுகநலன்களை விசாரிப்பதற்காக கல்கிஸ்ஸ சிறிதர்மபாலராமயவுக்குச் சென்றபோது பிரதமர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம் எனவும் பிரதமர் மஹிந்த குறிப்பிட்டார்.
தொற்றுநோய் காரணமாக நாட்டில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பெருமளவில் தளர்த்தப்பட்டுள்ளன. பெரும்பாலும் சகல அலுவலகங்களும் திறக்கப்பட்டுள்ளன.
முப்பது முதல் ஐம்பது சதவீத பணியாளர்கள் கடமைகளுக்கு சமூகமளித்துள்ளனர். தற்போது கடற்படைவீரர்கள் மத்தியிலான வைரஸ் பரவல் மாத்திரமே உள்ளது. இதனையும் கட்டுப்படுத்தியிருப்பதாக பிரதமர் தெரிவித்தார். (ஒ,5)

# அம்புலன்ஸ் மோதி பரிசாரகர் உயிரிழப்பு

## சீதனப் பணம் கொடுக்கச் சென்ற வேளை துயரம்

பளை, மே 21
மோட்டார் சைக்கிளைப் பின் தொடர்ந்து வந்த விமானப் படையின் அம்புலன்ஸ் மோதியதில், அதில் பயணித்த கணவன் சம்பவ இடத்தில் சாவடைத்தார். மனைவி காயங்களுடன் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த விபத்து பளை நகரப் பகுதி இரட்டைக்கேணி அம்பாள் கோவிலுக்கு அருகில் ஏ 9 வீதியில் இன்று காலை நடந்தது. நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த யாழ்.போதனா மருத்துவமனையில் பரிசாரகராகப் பணிபுரியும் அந்தோனி அஞ்சலஸ் (வயது51) சம்பவ இடத்தில் சாவடைந்துள்ளார். இவரது மனைவியான அஞ்சலஸ் இராஜேஸ்வரி (வயது50) என்பவர் காயமடைந்த நிலையில் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். சாவடைந்தவரின் சடலம் பளை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
மகளுக்கு முல்லைத்தீவில் திருமணம் பேசி சீதனப்பணம் கொடுக்கச் சென்ற வேளையில், விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(க-9,214,35,6)



# பெரும் மரம் சாய்ந்தது

வவுனியா, மே 21
பலத்த காற்றின் காரணமாக, வவுனியா ரயில் நிலைய வீதியின் வீதியோரத்தில் நின்ற பழமை வாய்ந்த மரமொன்று வீழ்ந்து முறிந்தது.
இன்று மதியம் அதிகரித்த காற்றின் காரணமாக மரம் முறிந்தது. அதனால் மின்சார இணைப்பு தடைப்பட்டது. எனினும் எவ்வித சேதங்களோ அல்லது உயிர்ச்சேதங்களோ ஏற்படவில்லை முறிந்து மரத்தை அந்தப்பகுதி மக்கள் மற்றும் வர்த்தகர்கள் அகற்றினர்.(க-18)



# சட்டவிரோத மணல் அகழ்வால் விவசாயச் செய்கை பாதிப்பு!

## தர்மபுரம் விவசாயிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 21
வயல் நிலங்களை அகழ்ந்து மணல் ஏற்றிச்செல்கின்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் இடம்பெறுகின்றன.
இது தொடருமானால் குளங்களுக்குள் விவசாயம் செய்யவேண்டியநிலைதான் ஏற்படும். இந்த நடவடிக்கையை உரியவர்கள் தடுத்து நிறுத்தி வளம்மிக்க பூமியைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே தர்மபுரம். இங்கு காணப்படுகின்ற வயல்வெளிகளில் தொடர்சியாக மண் அகழ்வு இடம்பெறுகின்றது. குறிப்பாக மனிதனுக்கு உணவு என்பது மிக முக்கியமான தேவையாகும். நெல் விதைப்புக்கள் மேற்கொள்கின்ற பகுதியில் காணப்படுகின்ற சில பிட்டிகளை அகழ்ந்து மண்ணினை ஏற்றிச்செல்கின்றனர். பிட்டியில் வைத்து மழை காலங்களில் சூடு அடிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. வெள்ளம் ஏற்பட்டாலும் அந்தப் பிட்டி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. பிட்டிகளை அகழ்ந்தவர்கள் வயல்களையும் விடுவதாக இல்லை, பிட்டிகளுக்கு அருகில் உள்ள வயல் நிலங்களையும் சேர்ந்து அகழ்கின்றனர்.
இப்படியே போனால் குளங்களுக்குள்ளேயே விவசாயம் செய்யவேண்டியநிலை ஏற்படும் இது தொடர்பாக தர்மபுரம் பொலிஸ் நிலையம், புளியம்பொக்கணை கமநலசேவை நிலையம், கனியவளத் திணைக்களம் ஆகியோரிடம் பல முறைப்பாடுகளை மேற்கொண்டும், இதுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. எனவே இதில் அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் - என்றனர்.
அந்தப் பகுதியில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். எனினும் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-113)

# தேர்தல் பிற்போடப்பட்டால் நெருக்கடிகள் அதிகமாகும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 21
தேர்தல் காலம் தாழ்த்தப்படும்போது நாட்டில் காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் மேலும் அதிகரிக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கட்சி என்ற ரீதியில் நாம் சுயாதீனமாகப் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களால் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. அதைவிடப் பாரதூரமான வகையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையும் சர்வதேசமும் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளன.
தற்போது பிரதானமாக நாடாளுமன்றம் மற்றும் பொருளாதாரம் பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. சு.கவின் தனிப்பட்ட நிலைப்பாடானது தேர்தல் பற்றிய பிரச்சினையை விடவும் நாடாளுமன்றத்தின் பொறுப்பு மற்றும் அரசமைப்புக்கமைய நாட்டை ஆட்சி செய்தல் என்பவற்றுக்காக நாடாளுமன்றத்தின் கடமைகள் என்பவற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்றம் இன்றி நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்ல முடியாது. தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதாரம், அரசியல் மற்றும் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும்.
நாடாளுமன்றம் கூட்டப்படாமல் நாளுக்குநாள் காலம்தாழ்த்தப்படுவதானது நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிறந்தல்ல. தேர்தல் காலம் தாழ்த்தப்படும்போது நாட்டில் காணப்படும் அனைத்து பிரச்சினைகளும் நெருக்கடிகளும் மேலும் அதிகரிக்கும். எனவே தேர்தல் நடத்தப்படுவது மிகவும் அவசியமானதாகும். அரசியல் ஸ்திரத்தன்மைக்குள் தற்போதைய ஜனாதிபதி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது அத்தியாவசியமானதாகும் - என்றார். (ப)



# ஆளுநரைச் சந்தித்த கடற்படைத் தளபதி!

திருகோணமலை, மே 21
கிழக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் யு.எஸ்.ஆர் பெரேரா கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.
நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பிரச்சினைகள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர். ரியர் அட்மிரல் யு.எஸ்.ஆர் பெரேரா கிழக்கு கடற்படைத் தளபதியானதன் பின்னர் ஆளுநரை சந்திப்பது இதுவே முதல்முறை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-40)

# கட்டடங்களுக்கு ஒரு மாத வாடகை நிறுத்தம்

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

சாவகச்சேரி, மே 21
சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு ஒரு மாதத்துக்கான வாடகை, சந்தைக் குத்தகை என்பன மீண்டும் திறக்கப்படும் நாள் வரை நாள் கணக்கில் அறவிடுவது நிறுத்தப்படும் என்று சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வில் தெரிவிக்கப்பட்டது. சபைக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கும் வர்த்தக நிலையங்களுக்கு மாதாந்தம் அறவிடும் வாடகைத் தொகையை இரண்டு மாதங்கள் நிறுத்தப்பட வேண்டுமென சபையின் உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்தநிலையில், ஒரு மாதத்துக்கு நிறுத்துவதென சபையில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-9)

# வீதி வியாபாரத்துக்கு மாற்று இடங்கள்!

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

சாவகச்சேரி, மே 21
சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சந்தையை நடத்த அனுமதி வழங்கப்படாத நிலையில் சமூக இடைவெளியைப் பேணும் வகையில் வீதியோரங்களில் இயங்கும் வியாபார நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அதன்பிரகாரம் தனங்களப்பு வீதியில் கடலுணவுகள் விற்பனைப் பிரிவுக்கு முன்பாக வீதியோரத்தில இயங்கும். கடலுணவுகள் விற்பனைப் பிரிவை அருகில் உள்ள மைதானத்திலும் சாவகச்சேரி கச்சாய் வீதியில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக இயங்கும் மரக்கறி விற்பனைப்பிரிவுகளை டச்சு வீதியிலும் நவீன சந்தை முன்பாக இயங்கும் வெற்றிலை மற்றும் பழவகைகள் விற்பனைப் பிரிவுகளை பஸ் நிலைய வீதியிலும் நடத்த அனுமதிப்பதென தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார் .
இது தொடர்பாக நகரசபையால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டபோதிலும் தற்போது நிலவும் வெயில் மற்றும் கடும் காற்று காலத்தில் பஸ் நிலைய வீதியில் வியாபாரம் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. அதனால் நவீன சந்தையின் உட்புற விறாந்தையில் வியாபாரம் நடத்த அனுமதிக்குமாறு வெற்றிலை மற்றும் பழவகைகள் வியாபாரிகள் தவிசாளரைக் கேட்டுள்ளனர். (ப-9)




# டெங்கு அபாயம் அவதானம் தேவை

## சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை



கொடிகாமம், மே 21
தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் டெங்கு பரவும் அபாயம் உள்ளது என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:
மழையுடனான காலநிலையுடன் சகல வருடங்களையும் போல, வைகாசி, ஆனி மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் காணமுடிகிறது.
கொரோனா தொற்றுப் போலவே டெங்குத் தொற்றின் மூலமும் அதிகளவு எண்ணிக்கையில் நோயாளர்கள் இனங்காணப்பட்டால், அது சுகாதாரத் துறையினர் எதிர்கொள்ளமுடியாத அபாய நிலையை ஏற்படுத்தும். ஏதாவதொரு காரணத்தால் இவ்விரு நோய்நிலைகளுக்கும் ஒரேயடியாக முகம்கொடுக்க நேருமானால் சுகாதாரத் துறை மிக நெருக்கடியான நிலைமையை எதிர்கொள்ள நேரிடும். நாம் அறியவேண்டிய விடயம் ஒன்றுள்ளது. டெங்கு நுளம்பு அதிக தூரம் பறக்கும் நுளம்பல்ல. டெங்கு நோயாளிகளின் வீடுகள் மற்றும் வேலைத்தளங்களைப் பரிசீலிக்கும்போது நுளம்பு பெருகும் இடங்கள் அச்சுற்றாடலிலேயே காணப்படுவதாகும். கொரோனா எமக்கு கற்றுத்தந்த பாடமாவது நமது ஆரோக்கியத்துக்காக நாம் பல காரியங்களைச் செய்யவேண்டும் என்பதாகும். இது, ஒருபோதும் குழுவாக ஒன்றுசேர்ந்து சிரமதானம்செய்ய உகந்த காலமல்ல. ஆனால் எமது தோட்டச் சுற்றுப்புறத்தைப் போலவே வீட்டினுள்ளும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் இருக்கக்கூடும். இவ்வாறான இடங்களைத் தேடிப்பார்த்து, அகற்றி நுளம்புகள் பெருகாதவாறு தடுக்க தாமதிக்கவேண்டாம். எமது அன்பானவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக எமது வீட்டிலிருந்தே யுத்தத்தை ஆரம்பிப்போம்! புதிய நாடொன்றை உருவாக்குவோம்-என்றுள்ளது. (ஐ-159)



# மழையால் நீர்மின் உற்பத்தி உயர்வு

கொழும்பு, மே 21
நாடுமுழுவதும் பெய்த கன மழையால் நீர்மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
நீர்மின்சக்தி உற்பத்தி தொடர்பில் இலங்கை மின்சார சபை மின்சக்தி, சக்திவலு அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு சமர்ப்பித்த அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த சில நாள்களாக நாட்டில் நிலவிய வறட்சியான காலநிலை காரணமாக நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாகக் குறைவடைந்து, நீர்மின் உற்பத்தி 15-20 சதவீதம் வரை குறைந்தது.
தற்போது அம்பான் சூறாவளியின் தாக்கம் காரணமாக, நாடு முழுவதும் பெய்யும் பலத்த மழையால் அனைத்து நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. நீர்மின் உற்பத்தி 31 சதவீதமாக அதிகரித்துள்ளது. 668 மெகா வாட் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)



# கழிவுப் பொருள்களில் வாகனம் வடிவமைப்பு

## கிளிநொச்சி இளைஞனின் முயற்சி

கிளிநொச்சி, மே 21
கழிவுப் பொருள்களைக்கொண்டு மோட்டார் வாகனம் ஒன்றை வடிவமைத்துள்ள கிளிநொச்சி இளைஞனின் முயற்சிக்கு பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தனைச் சேர்ந்த இளைஞனின் நீண்டநாள் முயற்சி கணிசமான அளவு பூரணம் அடைந்துள்ளது. குறித்த மோட்டார் வாகனத்தைச் செலுத்தக்கூடிய வகையில் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளார்.
கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த சூழலை சாதகமாகப் பயன்படுத்தி தனது திறமை, நீண்டகால முயற்சி, சாதிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் முழு மூச்சாக உழைத்து கழிவுப் பொருள்களைக்கொண்டு மோட்டார் வாகனத்தை வடிவமைத்துள்ளார்.
பழுதடைந்த மோட்டார் சைக்கிள் எஞ்சினை திருத்தி அதனை குறித்த வாகனத்துக்குப் பயன்படுத்தியதுடன், கழிவாக வீசப்பட்டிருந்த வாகனப் பொருள்களையும் பயன்படுத்தியே மோட்டார் வாகனத்தை வடிவமைத்துள்ளார்.
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்ற அருள்தாஸ் றொசான் என்ற 20 வயதுடைய இளைஞன் சிறு வயதிலிருந்தே இவ்வாறான வடிவமைப்பு தொடர்பில் ஆர்வம் செலுத்தி வந்துள்ளதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார். குடும்பப் பொருளாதாரம் பின்னிலையில் இருந்தபோதிலும், மகனின் முயற்சியைத் தட்டிக்கொடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
உயர்தரக் கல்வியை நிறைவுசெய்ய குறித்த இளைஞன் தொழில் பயிற்சி நிறுவனத்தில் கல்வி கற்று வருகின்றார். குறித்த வடிவமைப் பின்போது பொருளாதாரம் சார்ந்த பல தடைகள் தனக்கு ஏற்பட்டதாகவும், வைத்தியசாலையில் நோயாளர்களைப் பராமரிப்பதன் ஊடாக கிடைக்கும் வருமானத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் இளைஞன் தெரிவித்துள்ளார்.
இளைஞனின் முயற்சிக்கு கண்டாவளைப் பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் நேரில் சென்று பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (க-6,159)

# பௌத்த மதத்தை அவமதிக்கும் மங்கள

## ரோஹித அபேகுணவர்தன சீற்றம்

கொழும்பு, மே 21
பௌத்த பிக்குகளையும், பௌத்த மதத்தையும் அவமதிக்கும் விதமாகவே முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கருத்துரைக்கின்றார். பொதுத்தேர்தலின் ஊடாக பெரும்பான்மை மக்கள் அவருக்கும் தகுந்த பாடம் புகட்டுவர். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.
பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தொடர்ந்து பௌத்த மத பிக்குகளுக்கும், மத கோட்பாடுகளுக்கு எதிராகவும் கருத்து தெரிவித்தார்கள். இதன் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் புறக்கணித்தார்கள்.
முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர பௌத்த மதத்தை அவமதிக்கும் விதமாகவே தற்போதும் கருத்துத் தெரிவித்துள்ளார். நாட்டு மக்கள் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பார்கள். பௌத்த மதத்துக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்குப் பொதுத்தேர்தலின் ஊடாக தகுந்த பாடம் புகட்டுவார்கள். கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது- என்றார்.(க)

# மான் இறைச்சியுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 21
இரண்டு கிலோ மான் இறைச்சியை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லிப்பளை அறத்திநகர் பகுதியில் நேற்று மான் இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய பளை பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவினர் இந்த நபரைக் கைதுசெய்து சோதனையிட்டபோது இரண்டு கிலோ மான் இறைச்சி மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-6)

# உணவகங்களை திறக்க அனுமதி

கொழும்பு, மே 21
கொரோனா வைரஸ் தொற்று அபாயத்தால் மூடப்பட்டுள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களை அடுத்த வாரம் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுகாதார அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையில் சேவைகளை வழங்கும் பிற தொழில்முனைவோர் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
கலந்துரையாடலில் சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள், சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் சுற்றுலா ஹோட்டல்களை மீண்டும் திறப்பதற்கு அமைச்சர் ஒப்புக்கொண்டனர்.
ஹோட்டல் உரிமையாளர்களும் உணவகங்களை மீளத் திறக்க உலக சுகாதார ஸ்தாபனம் முன்னதாகவே வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ சுட்டிக் காட்டினார்.
சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதன் கீழ் ஹோட்டல் மற்றும் உணவகங்களை மீண்டும் திறக்க ஒரு திட்டம் தொடங்கப்பட வேண்டும் என்றும், உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கிய வழிகாட்டுதல்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க)

# உயிரிழந்தவர் மீண்டு வந்தாரா?

## கொழும்பில் பரபரப்பு

கொழும்பு, மே 21
கொழும்பில் ஒரு மாதத்துக்கு முன்னர், விபத்தில் உயிரிழந்ததாகச் சொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட நபர் மீண்டும் திடீரென வந்தமையால் பிரதேசத்தில் குழப்பநிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் மீகொட நடுஹேன, முத்துஹேனவத்தை வீதி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
சம்பந்தப்பட்ட நபர் நேற்று முன்தினம் பிரதேசத்துக்கு வந்தமையால் மக்கள் அச்சமடைந்து, அவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.
ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி மீகொடை, நடுஹேன, முத்துஹேனவத்தை வீதி பிரதேசத்தில் இரவு 11.45 மணியளவில் மேஜர் ஒருவர் பயணித்த மோட்டார் வாகனத்தில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த நபரை மேஜர் மருத்துவமனையில் சேர்த்துள்ளார். அவரின் நிலைமை ஆபத்தாக இருந்தமையால் அன்று இரவே கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணி நேரங்களில் அவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பில் விசாரணை மேற்கொள்ளச் சென்ற பொலிஸ் அதிகாரி உயிரிழந்த நபரின் ஒளிப்படத்தை எடுத்துள்ளார். உயிரிழந்த நபரின் அடையாளத்தை உறுதி செய்யமுடியாமையால், எடுக்கப்பட்ட ஒளிப்படத்தைக் கொண்டு அந்த பிரதேசத்தில் உள்ளவர்களிடம் வினவியுள்ளார். அதனைப் பார்த்தவர்கள் புகைப்படத்தில் இருப்பவர் 'களுத்துறை மாமா' என குறிப்பிட்டுள்ளனர். பின்னர் களுத்துறை மாமா என்ற 79 வயதுடைய நபரின் 6 பிள்ளைகள் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு சடலம் பொலிஸாரினால் காண்பிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் தமது தந்தை என பிள்ளைகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த அவரின் சடலம் கடந்த மாதம் 17ஆம் திகதி குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை அவர் மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளார். அவரைப் பேய் என நினைத்த மக்கள் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் சம்பவ இடத்துக்கு வந்த பொலி ஸார் குறித்த நபரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர். அவரது பிள்ளைகளையும் பொலிஸார் அழைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,5)

# சுகாதார ஊழியர்களின் போராட்டம் நிறுத்தம்



மட்டக்களப்பு, மே 21
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார உதவியாளர்கள் மேற்கொண்டுவந்த போராட்டம் பணிப்பாளரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது.
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இன்று காலை கடமைநேரத்துக்குப் பின்னர் சுகாதார உதவியாளர்கள் வந்திருந்தநிலையில் கையொப்பம் இடும் புத்தகம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் சுகாதார உதவியாளர்கள் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.
தாங்கள் பொலநறுவையில் இருந்து வருவதன் காரணமாகவே நேரம் கடந்து வருவதாகவும் அதனை கருத்தில்கொள்ளாமல் வைத்தியசாலை நிர்வாகம் நடந்து கொள்கின்றது என்றும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். எனினும் பஸ் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் நேரம் கடந்து கடமைக்கு வருவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி க.கலாரஞ்சினி தெரிவித்தார். எனினும் அதிகளவானோர் பொலநறுவையிலிருந்து வருவதன் காரணமாகப் போக்குவரத்து பஸ்கள் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் தற்போதைய சூழ்நிலையில் ஏனைய போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறாத நிலையில் உரிய நேரத்துக்கு வரமுடியாது உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் கவனத்தில் கொண்ட பணிப்பாளர் இலங்கை போக்குவரத்து சபையுடன் தொடர்புகொண்டு பேசி மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதாகவும் இனிவரும் காலங்களில் நேரத்துக்கு சமூகமளிக்குமாறும் தெரிவித்ததை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ப)

# மன்னாரில் 2ஆம் கட்ட சமுர்த்திக் கொடுப்பனவு

மன்னார், மே 21
மன்னாரில் இரண்டாம் கட்ட சமுர்த்திக் கொடுப்பனவு வேகமாக நடைபெற்று வருகிறது என்று மன்னார் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் இப்ராஹிம் அலியார் தெரிவித்தார்.
மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் கட்ட சமுர்த்தி நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த 18ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வரை 12ஆயிரத்து 523 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரண உதவி பெற உள்ள 32ஆயிரத்து 392 குடும்பங்களுக்கு 162 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது
இந்தக் கொடுப்பனவானது சமுர்த்தி உதவி கிடைக்கப் பெறாதவர்கள், காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர், கொரோனா வைரஸ் தொற்றால் தொழில் வருமானம் இழந்தோர், தமக்கும் சமுர்த்தி நிவாரணம் தேவை என்று மேன்முறையீடு செய்திருந்தவர்கள், என்று நான்கு பிரிவுகளில் வழங்கப்படுகிறது. (ப-213)



# பலா முறிந்து வீடு சேதம்

கொடிகாமம், மே 21
பலா மரம் முறிந்து வீட்டின் மேல் வீழ்ந்ததில் வீடு சேதமடைந்துள்ளது.
இந்தச் சம்பவம் கொடிகாமம் ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.
தற்போது வீசும் காற்றால் வீட்டுக்கு அருகில் உள்ள பலாமரம் முறிந்து, வீட்டின் மேல் வீழ்ந்துள்ளது. வீட்டின் ஓடுகள் உடைந்து பகுதியளவில் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-159)

# அம்பானின் தாக்கம் குறைவடைகிறது

கொழும்பு, மே 21
நாட்டின் வானிலையில் அம்பான் சூறாவளியின் தாக்கம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது. அம்பான் என்ற சூறாவளியானது திருகோணமலைக்கு வடகிழக்காக வடமேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கும் அண்மையாகவுள்ள கடற்பரப்புகளுக்கும் மேலாக மையம் கொண்டுள்ளது.
இது வடக்கு - வடகிழக்குத் திசையில் இலங்கையை விட்டு விலகி நகர்ந்து வங்காளதேசக் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. தென்,மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. முக்கியமாக நுவரெலியா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழைபெய்யும் வேளைகளிலும், தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (க)

# தூக்கி வீசப்பட்டார் டபிள்யு.ஜி.ரணசிங்க

கொழும்பு, மே 21
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்தும் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் டபிள்யு.ஜி.ரணசிங்க உடனடியாக அமுலுக்குவரும் வகையில் பதவி நீக்கப்பட்டுள்ளார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் தலைமையில் நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் மாவட்டத் தலைவர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கட்சியின் தீர்மானங்களுக்கு முரணாகச் செயற்பட்டமையின் காரணமாகவே டபிள்யு.ஜி.ரனசிங்க சுதந்திக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்தும் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார் என்றும் சட்டத்தரணி ரஞ்சித் த சில்வா மஸ்கெலியா தொகுதியின் பதில் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப)

# கடுங்காற்றால் வீடு சேதம்

சாவகச்சேரி, மே 21
தென்மராட்சிப் பிரதேசத்தில் வீசும் கடும் காற்றால் சரசாலைப் பகுதியில் உள்ள வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று சரசாலை வடக்கு கிராம அலுவலர் பிரதேச செயலகத்துக்கு அறிவித்துள்ளார். பிரதேச செயலக இடர் காப்பு முகாமைத்துவ பிரிவினர் பாதிக்கப்பட்ட வீட்டினரைப் பார்வையிட்டு அறிக்கை தயாரித்துள்ளனர். வீட்டின் ஓடுகள் பல தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளன. இதே இடத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் விநோதன் என்பவரின் வீட்டின் கூரையோடுகளே சேதமடைந்துள்ளன. (ப-9)

# கொரோனா காலத்தில் பல வேலைத்திட்டங்கள்

## பருத்தித்துறை பிரதேச செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 21
கொவிட் 19 வைரஸ் தொற்று நாட்டில் அடையாளம் காணப்பட்ட நாள் முதல் அதற்கெதிரான பல்வேறு வேலைத் திட்டங்களை பருத்தித்துறை பிரதேச செயலகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது என்று பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், ஜனாதிபதி செயலணி, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள், அமைச்சு மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகள் எவ்வித தடையுமின்றி எமது பிரதேசத்தில் கிடைக்கச்செய்வதுடன் பொதுமக்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகள், பொதுமக்கள் போக்குவரத்துக்கான அனுமதிகள், அத்தியாவசிய சேவைகளை வழங்குபவர்களுக்கான அனுமதி என்பவற்றுடன் பொது மக்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு ஆயிரத்து 708 பயனாளிகளுக்கும், மாற்றுவலுவுடைய நபர்களுக்கான கொடுப்பனவு 612 பயனாளிகளுக்கும், சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான கொடுப்பனவு 26 பயனாளிகளுக்கும், சமுர்த்தி கொடுப்பனவு 6 ஆயிரத்து 93 பயனாளிகளுக்கும், நலிவுற்ற குடும்பங்களுக்கான கொடுப்பனவு 3 ஆயிரத்து 254 குடும்பங்களுக்கும், விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவு 164 குடும்பங்களுக்கும், கடற்றொழில் ஓய்வூதியக் கொடுப்பனவு 121 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய்களுக்கான கொடுப்பனவு ஆயிரத்து 738 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் 6 ஆயிரத்து 890 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கொடியநோய் பரவுதலுக்கு மத்தியிலும் இரவு பகல் பாராது மிகுந்த சிரமத்தின் மத்தியில் சிறப்பாக சேவையாற்றி பொதுமக்களுக்கு உதவித்திட்டங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.
எதிர்வரும் காலங்களிலும் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை எமது பிரதேச செயலகம் வழங்கும்- என்றுள்ளது. (க)

# சாவகச்சேரி சந்தையை திறப்பதற்கு முன்வாருங்கள்

## நகரசபை உறுப்பினர்கள் வேண்டுகோள்

சாவகச்சேரி, மே 21
சாவகச்சேரி பொதுச்சந்தையை மீண்டும் திறக்க தவிசாளரும், செயலாளரும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென நேற்று நடைபெற்ற அமர்வில் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது; மாவட்டத்தில் உள்ள ஏனைய சந்தைகளை விட சாவகச்சேரி பொதுச்சந்தை பெரும் இடப்பரப்பைக் கொண்டது.
சமூக இடைவெளியை மேற்கொள்வதற்கு வியாபாரிகளை மாற்று ஏற்பாடுகள் மூலம் அந்தந்தப் பிரிவுகளில் தேவையான இடைவெளிகளில் வியாபாரம் மேற்கொள்ளமுடியும். பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளைப், பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி சந்தையை இயக்க முடியும்.
இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடன் தவிசாளரும் செயலாளரும் நேரடியாகச் சென்று விளக்கமளித்து மீண்டும் இயங்கச் செய்யவேண்டும். சபையால் வட்டார ரீதியில் தற்காலிக சந்தைகள் அமைக்க அனுமதி வழங்கியுள்ளபோதிலும் வங்கிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவை நகரப் பகுதியிலேயே இயங்குவதால் தமது தேவைக்காக நகரப்பகுதிக்கு வருவோர் தமக்குத் தேவையான பொருள்களை, கடலுணவுகளை வாங்கிச் செல்கின்றனர். இதனால் வட்டாரங்களில் தற்காலிக சந்தையில் வியாபாரம் செய்வோர் வியாபாரமில்லையெனக் கூறுகின்றனர்.
சாவகச்சேரி நகரப் பகுதியில் அனைத்து அரச தனியார் நிறுவனங்களும் இயங்குவதால் அங்கு பணிபுரிவோர் கடமைமுடிந்து வீடு செல்லும் வேளையில் மரக்கறி வியாபார நிலையங்கள் மூடப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இதனால் சாவகச்சேரி பொதுச்சந்தையின் நிலைப்பாட்டை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்து விரைவில் சந்தையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். இதற்குப் பதிலளித்த தவிசாளர் சந்தை தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுடன் கதைத்துள்ளோம். மக்களைக் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டியது மாவட்ட மாகாண உயர் அதிகாரிகளின் கடமை என்பதால் சந்தையைத் திறப்பதில் தாமதம் ஏற்படுகிறது. உறுப்பினர்களின் கோரிக்கை அதிகாரிகளின் கவனத்துக்கு நேரடியாகவும் கடிதம் மூலமும் தெரியப்படுத்தப்படும் - என்றார். (ஐ-9)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 32 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 21
தற்போது உள்ள காற்றுடனான சீரற்ற வானிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக காற்றுடன்கூடிய மழை காரணமாக பல்வேறு பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் மாவட்டத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடு கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
குறித்த சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் மாட்டுக்கொட்டகைகள் என 3 வேறு பாதிப்புக்களும் பதிவாகியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப-6)

## மேலதிக வகுப்புகளை நடத்திய

# இரு ஆசிரியர்கள் உள்ளிட்ட 14 மாணவர்கள் தனிமையில்

கொழும்பு, மே 21
கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அரசாங்கத்தினால் விடுமுறை வழங்கப்பட்டுள்ளநிலையில் தலவாக்கலை பகுதியில் இரகசியமாக மேலதிக வகுப்புகளை நடத்திய இரு ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவர்கள் நேற்று புதன்கிழமை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
மேலதிக வகுப்பு நடத்தப்பட்ட வகுப்பறையையும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சீல் வைத்துள்ளனர் என்று தலவாக்கலை, லிந்துலை நகரசபையின் தலைவர் அசோக சேபால தெரிவித்துள்ளார்.
தலவாக்கலை - லிந்துலை நகர சபைக்கு உட்பட்ட தலவாக்கலை பகுதியில் இரண்டு ஆசிரியர்கள் ஒன்றிணைந்து சமூக இடைவெளி மற்றும் சுகதார முறைகளைக் கடைப்பிடிக்காது உயர்தர மாணவர்கள் 14 பேருக்கு வகுப்பு நடத்தி வந்தமை தொடர்பில் தலவாக்கலை லிந்துளை நகரசபைத் தலைவருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த இரண்டு ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவர்களையும் தலவாகக்கலை லிந்துளை நகர சபைக்கு அழைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதையடுத்து இது தொடர்பில் தலவாக்கலை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் தலவாக்கலை பொலிஸார் ஆகியோருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த இரண்டு ஆசிரியர்கள் மற்றும் 14 மாணவர்களும் அவர்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ப)



# கருங்குளவிகள் தாக்கியதில் இருவர் காயம்

சாவகச்சேரி, மே 21
கருங்குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நுணாவில் மேற்கைச் சேர்ந்த 67 வயது முதியவரும் சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்த 72வயது மூதாட்டியுமே இவ்வாறு சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோதே கருங்குளவிகள் அவர்களைத் தாக்கியுள்ளன.
தற்போது வீசும் கடும் காற்றால் பனை மர ஓலைகளில் கருங்குளவிகள் கட்டியிருந்த கூடுகள் விழும்போது அதனுள்ளிருந்து புறப்படும் கருங்குளவிகள் அந்தப் பகுதிகளில் நடமாடுபவர்களைத் தாக்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரத்தில் இதுவரை பத்துக்கு மேற்பட்டோர் கருங்குளவிகளால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப-9)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸ் அச்சகத்தில் 21.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.